தீனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்றும், அறங்காவலர்க்கு ஆணையிடப்பட்டுள்ளது. இடிந்து கிடக்கிற கோயிலையும், கட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கோயில் சொத்துக்களையெல்லாம் சரிவரக் கவனிக்காததற்குக் காரணம் அறநிலைய இலாகாதான், யாராவது மனுப் போட்டால்தான் அதற்குப் பிறகு கவனிக்கிறார்கள். (You br ng it under the control of the H. R. E. Board) என்ற நிலைமை தான் இருக்கிறது. இந்த இலாகா தானாகவே இதைப் பற்றியெல்லாம் ஆராய்வதற்கு என தனிப் பிரிவு ஒன்றை வைத்திருக்கிறதா ? எந்த அடிப்படையிலே கோயில் சொத்துக்கள் எல்லாம் கண்ட்ரோல் செய்யப்படுகின்றன ; கண்காணிக்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இதற்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தி கவனிப்பார்களா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : கோயில் சொத்துக்களைக் கண்டறிவதற்காக ஒரு அலுவலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கிராமம் கிராமமாகச் சென்று ஆயிரக்கணக்கான ஏக்கர் கோயில் நிலங்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள். மேற்கொண்டு தொடர்ந்து அவர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினர் திரு ராமையா நாயுடு அவர்களிடத்திலே அந்தச் சொத்துக்களைக் கேட்கச் சென்றபோது அவர் அவர்களை அடித்துத் துரத்தி இம்சித்து அனுப்பியிருக்கிறார் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

பெரியபாளையத்தில் அனதை விடுதி

*264 வின.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையத்தில் உள்ள பவானி அம்மன் கோவில் நிர்வாகத்தின் கீழ் அனதை விடுதி ஒன்று அமைப்பதில் கால தாமதம் ஏற்படுவதற்கான கார்ணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெரியபாளையம், பவானி அம்மன் கோயில் நிர்வாகத்தின்கீழ் அனதை விடுதி ஒன்று அமைக்க இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர், சென்னை 4—4—1972 அன்று ஒப்புதல் அளித்தார். அதற்கான மதிப்பீட்டுக்கு ஆணையர் 21—7—1972 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். ஒப்பந்த அறிவிப்புகள் கிடைக்கப் பெற்றதும் கட்டிட வேலை துவக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எவ்வளவு தீவிரமாகவும் அக்கறையோடும் இருந்தாலும் பரம்பரை டிரஸ்டிகள்—ஹெரிடிட்டரி டிரஸ்டிஸ்—நிர்வாகத்திலே இருப்பதாலே அந்தக் கோயிலுக்குப் பல ஆயிரக்கணக்காக ரூபாய் வருமானம் வந்தும்கூட அனாதை விடுதி கட்டுவதற்குத் தாமதம் காட்டுகிறார்கள். எனவே பரம்பரை டிரஸ்டி முறையை ஒழித்து பொது டிரஸ்டிகள் ஏற்படுத்தும் முறையைக் கொண்டுவரக்கூடிய முறையில் சட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இத்தகைய யோசனை அந்தக் கோயிலின் அறங்காவலர்க்கு எடுத்துக் கூறப்பட்டது, அவர்களும் ஒப்புக் கொண்டு 21—7—1972-ஆம் நாளன்று ஆணையர் உத்திரவு போட்டுள்ளார்கள். ஆனால் அதற்குத் தேவையான சரியான இடம் கிடைக்கவில்லை என்பதுதான் தாமதத்திற்கும் காரணம். அங்கேயுள்ள திருமண மண்டபத்திலோ அல்லது தற்காலிகக் கொட்டகையிலோ கொண்டு வரவேண்டுமென்று அறநிலையத்துறையினர் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியபாளையக் கோயிலில் ஆண்களும், பெண்களும் அம்மணத்தோடு கோயிலைச் சுற்றிச் சுற்றி வருகிறார்களே, அரசாங்கம் அதைத் தடை செய்யுமா? சில நேரங்களிலே வேப்பந்தழையை எடுத்துக்கொண்டும் சுற்றிக்கொண்டு வருகிறார்களே அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வேப்பந்தழையை வைத்துக் கொண்டு சுற்றிவருவது எங்களுக்குத் தெரியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இருப்பதாகத் தெரியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த பவானி அம்மன் கோயில் மூலமாக அனாதை இல்லம் கட்டப்படுவது ஆண் குழந்தைகளுக்காகவா அல்லது பெண் குழந்தைகளுக்காகவா? ஆண் குழந்தைகளுக்காக என்றால் பெண் குழந்தைகளுக்காக அமைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பவானி அம்மன் கோயில் மூலமாகக் கட்டப்படுவது ஆண் குழந்தைகளுக்காகத்தான். பெண் குழந்தைகளுக்காக வேறு கோயில்களில் ஆரம்பிக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அனாதை இல்லங்களை ஆரம்பிக்கும் வேலைகள் முடிந்ததும் அவர்களுக்குத் தொழில் கற்றுக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் அதோடு சேர்ந்து வருகிறதா? அல்லது வெறும் இல்லங்களை மட்டும் கட்டிப் பராமரிக்கப் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த அனுதை இல்லத்தில் குழந்தைகளைத்தான் சேர்த்துக்கொள்கிறோம். ஆகவே தொழில் கற்றுக்கொடுக்கும் பிரச்னை அங்கு வரவில்லை.

அறநிலையங்களில் உபரி நிதி.

*265. வினா.—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையங்களின் உபரி பணத்தில் தொழிற் பேட்டைகள் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஊர்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) இல்லை.

(இ) இவ் வினவிற்கு இடமில்லை.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து தொழில்பேட்டை அமைக்கவும், கண் இழந்தவர்களுக்கும், கை கால் ஊனமுற்றவர்களுக்கும் அந்தத் தொகையிலிருந்து நல்வாழ்வு அளிக்க அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, விழி இழந்தவர்களுக்கு விழி கொடுக்கவும், கை கால் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யவும் நம்முடைய கோயில்களின் உபரி நிதியிலிருந்து அந்த நிதிகளை ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறோம். சட்டத்திலே அதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கோயில் நிதியிலிருந்து தொழில்பேட்டை அமைக்க வேண்டுமென்ற நிலை இல்லை. ஏற்கெனவே கோயில்களுக்கு இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை ஒழுங்குபடுத்தினலே பெரிய அளவில் உதவி செய்ததாக முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்பத் அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் சுவேதாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தில் அறங் காவலராகப் பணியாற்றுகிறார். அந்தக் கோயிலுக்கு சுமார் 2,000 ஏக்கர் வரையில் நிலங்கள் இருப்பதால் அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை ஒழுங்குபடுத்தினலே ஏராளமான காரியங்களைச் செய்ய முடியும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the surplus, what is the percentage allotted for renovation of other temples ! Will priority be given for renovation of other temples out of the surplus funds ?

மாண்புமிகு திரு. மு. கண்ணபபன் : தலைவரவர்களே, கோயில் நிதியிலிருந்து திருப்பணிக்குத்தான் நாம் முதலிடம் தருகிறோம்.